**மதுக்கரை நகராட்சியில் 28.12.2023ம் நாள் நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.01**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 21335/2023/எப்1, நாள்: 14.11,2023ன் படி மாண்புமிகு தமிழநாடு முதலமைச்சரின் முகவரித்துறையின் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளை பெற்று 30 நாட்கள் காலத்தில் தீர்வு காண்பது தொடர்பாக முகாம்கள் நடத்தப்பட வேண்டியுள்ளது. அதன்படி நகராட்சி பகுதிகளில் உள்ள வார்டுகளை ஒருங்கிணைந்து முகாம்கள் நடத்தி பொது மக்களின் கோரிக்கைகளை பெற்று இணையத்தில் பதிவேற்றம் செய்து உரிய காலத்திற்குள் தீர்வுகாண்பதற்கு கீழ்காணும் விபரத்திற்கு முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

| வ. எண் | நாள்/ கிழமை/ நேரம் | முகாம் நடைபெறும் இடங்கள் | கோரிக்கை மனுக்கள் பெறப்படும் வார்டுகள் விபரம் | வார்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 21.12.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணி முதல் 3.00 மணி வரை | ஐ.என்.டி.யூ.சி மண்டபம், குரும்பபாளையம் ரோடு, மதுக்கரை | 1, 2, 3, 4, 5, 6, 7, 8 மற்றும் 9 | 9 |
| 2 | 29.12.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் 3.00 மணி வரை | கணபதி மஹால், மதுக்கரை மார்க்கெட், மதுக்கரை | 10, 11, 12, 13, 14, 24, 25, 26 மற்றும் 27 | 9 |
| 3 | 05.01.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் 3.00 மணி வரை | லக்ஷ்மி பாலாஜி மண்டபம், செட்டிபாளையம் பிரிவு, மரப்பாலம், மதுக்கரை | 15, 16, 17, 18, 19, 20, 21, 22 மற்றும் 23 | 9 |

மேற்படி, முகாமிற்கு வரும் பொது மக்களது கோரிக்கைகளை பெற்று கணினி வழி இணையதளம் மென் பொருளில் பதிவேற்றம் செய்வதற்கு இணையதள வசதிகள் ஏற்படுத்துவது, கணினிகள் வாடகைக்கு அமர்த்துதல், புள்ளிவிபரம் பதிவுகள் மேற்கொள்ள தட்டச்சர்கள் ஏற்பாடு செய்தல் மற்றும் முகாம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த தொடர்புடைய வார்டுகளில் விளம்பர தட்டிகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தல், இணையதளவசதி, மேஜை, நாற்காலி, சாமியானா வசதி, ஆட்டோ விளம்பரம், ஒலி பெருக்கி வசதி மற்றும் முகாம்களில் கலந்து கொள்ளும்

அனைத்து அரசு துறை அலுவலர்களுக்கு தேனீர், காலை உணவு, மதிய உணவுகள் வழங்குதல் உள்ளிட்ட இதர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியுள்ளது.

எனவே, மக்களுடன் முதல்வர் திட்டத்தினை செயல்படுத்திட அதற்காகும் உத்தேச செலவினம் சுமார் ரூ 12,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்:2001/2023/இ1).**

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மக்களுடன் முதல்வர் திட்டத்தினை உடனடியாக செயல்படுத்திட வேண்டியதன் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய செலவினங்கள் மேற்கொண்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.285</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.02</u>**

மதுக்கரை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் ஜெராக்ஸ் மெஷின் பழுதாகிவிட்டது. மேற்கண்ட ஜெராக்ஸ் மெஷின் பழுதுகளை சரிசெய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் குறைவாக வரப்பெற்றுள்ள M/s Digitech Solutions அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்பதற்கும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கும் M/s Digitech Solutions, அவர்களுக்கு தொகை வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2342/2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.10,769/- னை M/s Digitech Solutions நிறுவனத்திற்கு தொகை வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.286</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.03</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15 காந்தி நகர் விநாயகர் கோவில் வடக்கு பகுதி இடதுபுறம் சாலை 2 வலதுபுறம் சாலை 1 ஆகிய பகுதிகளில் கான்கிரீட் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. பொதுமக்களின் நலன்கருதி பழுதடைந்துள்ள கான்கிரீட் சாலைகளை மேம்பாடு

செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச செலவின மதிப்பீடு ரூ.5.00/- இலட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2427/2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.287</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.04</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 திரு.வி.க நகர் பகுதியில் சிறுபாலம் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட பழுதடைந்த சிறுபாலத்தினை அப்புறப்படுத்தி புதியதாக சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச செலவின மதிப்பீடு ரூ.1.20/- இலட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆகும் மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2432/2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.288</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.05</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 காந்தி நகர் விநாயகர் கோவில் அருகில் புதிதாக பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/-க்கு (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2628 /2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.289</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.06</u>**

மதுக்கரை நகராட்சி மலைக்குன்றுகளின் அருகில் அமைந்து உள்ளதால் யானைகள் மற்றும் வன உயிரனங்கள் அவ்வப்பொழுது கீழ்கண்டுள்ள வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் ஊருக்குள் புகுந்து பொதுமக்களை அச்சுறுத்தி வந்து செல்லும் நிலையில் உள்ளது. எனவே, அப்பகுதியில் தெருவிளக்கு ஏதும் இல்லாததால் பொதுமக்களின் நலன் கருதி அப்பகுதியில் சோலார் விளக்கு அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 2.10/- இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 2627/2023/இ1)

| வார்டு எண் | வன உயிரனங்கள் வரும் பகுதிகள் |
|---|---|
| 15 | காந்தி நகர் மற்றும் சூட்டிங் ரேன்ஞ் |
| 3 | அம்பேத்கர் சதுக்கம் |
| 17 | மிலிட்டரி கேம்ப் எதிர்புறம் |
| 4 | பெரியார் சதுக்கம் மற்றும் பாரதியார் சதுக்கம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**:

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.290</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.07</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற தகுதியான நபர்கள் தேர்வு செய்ய நடைபெற்ற முகாம்களுக்கு அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7) ன் படி அவசரகாலப் பணியினை மேற்கொண்டமைக்கும் மேற்கண்ட பணிக்குறிய தொகை ரூ. 76523/-னை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்தமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1468 /2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.291</u>**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.08</u>**

மதுக்கரை நகராட்சி அலுவலகத்திற்கு முன்புறமாக உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி 3 இலட்சம் லிட்டர் கொள்ளாவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து மிலிட்டரி கேம்ப், காந்தி நகர், விநாயகர் கோவில் வீதி, சூட்டிங் ரேஞ் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் வெளியேற்றப்படும் 150mm விட்டம் கொண்ட குழாய் உடைந்து தண்ணீர் கசிவு ஏற்பட்டது. எனவே மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியின் Scour Pipe னை மாற்றம் செய்து பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7) ன் படி அவசர அத்தியவசியமான குடிநீர் பணி மேற்கொண்டமைக்கும் மேற்கண்ட பணிக்குறிய தொகை ரூ.42925/- னை குடிநீர் நிதியிலிருந்து வழங்கியமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2256/2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.292</u>**

மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.09</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 4204/2023/பி1, நாள். 25.10.2023ன் கடிதத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கணினிகள் மற்றும் அச்சுப்பொறி இயந்திரங்கள் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலை உள்ளதாகவும், மேலும் அவ்வப்போது நடைபெறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டம், அரசு தலைமை செயலர், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களின் ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கைகளை உடனுக்குடன் பெற நவீன வசதிகளுடன் கூடிய கணினிகள் மற்றும் அச்சுபொறி இயந்திரங்கள் தேவைப்படுவதால் மதுக்கரை நகராட்சி பொது நிதியிலிருந்து கீழ்கண்டுள்ளவாறு கொள்முதல் மற்றும் விநியோகம் செய்து மேற்படி அலுவலகத்திற்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மதுக்கரை நகராட்சியில் புதியதாக பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளதால் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணினி இல்லாததால் கணிணி மற்றும் அச்சுபொறி இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00/- இலட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். /2023/இ1)

| வ.எண் | விபரம் | கணினி எண்ணிக்கை | அச்சுபொறி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், திருப்பூர் | 2 | 1 |
| 2 | மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை | 1 | 1 |
| | மொத்தம் | 3 | 2 |

<u>அலுவலக குறிப்பு</u>:

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.293</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.10</u>**

மதுக்கரை நகராட்சியில் 2023-2024ம் ஆண்டிற்கு நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் புதிய திட்டப்பணிகள் குறித்து பொது மக்கள் அறியும் வகையில் தினகரன் நாளிதழில் தொழில் மலரில் பிரசுரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 25,000/- ஆகும். மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்வதற்கும் M/s KAL PUBLICATIONS (P) LTD, அவர்களுக்கு தொகை வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2342 /2023/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் பட்டியல் தொகை ரூ.25,000/-னை M/s. KAL PUBLICATIONS (P) LTD நிறுவனத்திற்கு தொகை வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.294</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.11</u>**

மதுக்கரை நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு இயங்கி வரும் ஈப்பு வாகனத்தின் (TN99XX0553) முன்புற கண்ணாடி எதிர்பாராத விதமாக உடைந்து விட்டதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் (M/s CAI Auto Industries Private Limited, கோவை) வாயிலாக பணி மேற்கொள்வதற்கும், அதற்கு செலவாகும் தொகையினை காப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் வயிலாக செலுத்துவதற்கும், மேலும் கூடுதலாக வரப்பெறும் தொகையினை நகர் மன்ற தலைவர்

அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2087/2023/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கூடுதலாக வரப்பெற்ற தொகை ரூ.3200/- னை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்.295</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.12</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட குடிநீர் குழாய்கள் பராமரிக்க தேவையான குடிநீர் விநியோகப் பொருட்கள் சப்ளை செய்தல் பணிக்கு ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 30.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு .

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர். எஸ்.எஸ்.எஸ் பைப்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ் | மதிப்பீட்டினை விட 0.86% அதிகம் |
| 2 | திருவாளர். ஸ்ரீ பாரத் அன் கோ | மதிப்பீட்டினை விட 0.01% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். ஸ்ரீ பாரத் அன் கோ (மதிப்பீட்டினை விட 0.01% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது (ந.க.எண். 1999/1/2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.296</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.13</u>**

மதுக்கரை நகராட்சியால் 1922 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் பாரமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட தெருவிளக்குகளில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. இவற்றிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் இந்நகராட்சியில் தற்போது போதிய இருப்பு இல்லாததால் அதற்கு தேவையான

உபகரணங்கள் மற்றும் இதர பொருட்களை வாங்கி இருப்பு வைத்து பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 2711 /2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.297**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.14**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பில்லூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் பிரதான குழாய், பகிர்மான குழாய்கள், வால்வுகள், Water Supply Special போன்றவைகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. இவற்றிக்கு தேவையான குடிநீர் விநியோகப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2712 /2023/இ1)

**அலுவலக குறிப்பு** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.298**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.15**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர் பிரதான குழாய், குடிநீர் பகிர்மான குழாய், குடிநீர் குழாய் ஆகிய குழாய்களில் உடைப்புகள் ஏற்படும் பொழுது அவ்விடங்களில் குழிகளை தோண்டி உடைப்புகளை சரி செய்த பின்னர் குழிகளை மூடி தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. மேலும் மழைநீர் வடிகால், சிறுபாலங்களில் அடைப்புகள் ஏற்படும் பொழுது JCB இயந்திரத்தின் மூலம் அடைப்பினை சீர் செய்து தண்ணீர் தேங்காமல் சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வளர்ந்துள்ள முட்புதர்களை அகற்றி சுத்தம் செய்யவும் நகராட்சி பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற இதர பணிகளுக்கும் JCB வாகனம் அவசியம்

தேவைப்படுகிறது. தற்போது இந்நகராட்சியில் JCB இயந்திரம் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் JCB இயந்திரம் வைத்து மேற்கண்ட அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்காணும் விபரத்திற்கு ஏற்படும் உத்தேச செலவு ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 2714 /2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.299</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.16</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5 சாய் கார்டன் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் குழாயில் நல்ல தண்ணீர் மற்றும் உப்பு தண்ணீர் ஒரே குடிநீர் குழாய் வழியாக செல்வதால் அப்பகுதி மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைப்பதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே குழாய்களை மாற்றி அமைத்து நல்ல தண்ணீர் மற்றும் உப்பு தண்ணீர் குடிநீர் குழாய் தனி தனியாக அமைத்து பணிகள் மேற்கொள்ள ரூ.1.00/- இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண்.2713/2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.300</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.17</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, ACC காலனியில் உள்ள பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும் மற்றும் தரைதளம், தண்ணீர் தொட்டிகள் பழுதடைந்து உள்ளதை சரி செய்யப்பட வேண்டுமென கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி விபரத்திற்கு இடம் நேராய்வு செய்யப்பட்டதில் கழிப்பிடம் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதை கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பிடத்தில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.1.30/- இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.2710/2023/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.301**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.18**

நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்: 33552/2022/EA2-SWM-7, நாள்:10.01.2023-ன்படி இந்நகரில் உள்ள 27 வார்டுகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முதல் நிலை சேகரம் செய்யும் பணியினை மேற்கொள்ள ஆண்டு ஒன்றிற்கு ரூ.286.67 இலட்சம் மதிப்பீட்டில் 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தகுந்த சேவை வழங்குபவரை தேர்வு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 001 / 2022 / DO1 நாள் : 01.02.2023 இன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு இப்பணிக்கு 29.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திருவாளர். ஜெயசூர்யா இண்டஸ்ட்ரீஸ், திருப்பூர் அவர்களுக்கு 26.04.2023 ம் நாளன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் மேற்கண்ட பணிகளை திருப்திகரமாக மேற்கொள்ளாததால் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.284, நாள்.23.11.2023 ன் படி திருவாளர். ஜெயசூர்யா இண்டஸ்ட்ரீஸ், திருப்பூர் அவர்களின் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு புதிதாக மேற்கண்ட பணிக்கு 14.12.2023 ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதியினை பூர்த்தி செய்திருந்ததால் அவ்விரண்டு நிறுவனங்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளி உறை ( Financial Bid ) 18.12.2023 ஆம் நாளன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு டன் கழிவுகள் தரம் பிரித்து சேகரித்து செயலாக்க மையங்களில் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ரூபாயில் | விகிதாச்சாரம் |
|---|---|---|---|
| 1. | M/s. ANNAI ENTERPRISES Tiruppur-641608 | ரூ. 5,693 /- | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.53 % அதிகம் |
| 2. | M/s. APOLLO MANPOWER SERVICES Tiruppur-641608 | ரூ. 5,661/- | மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.04 % குறைவு |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள (டன் 1க்கு ரூ.5661.00 மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட 0.04% குறைவு) M/s. APOLLO MANPOWER SERVICES, திருப்பூர் அவர்களின் குறைவான ஒப்பந்தபுள்ளியினை ஏற்கவும் மதுக்கரை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்க்கொள்ள பணி ஆணை வழங்கிடவும், மேற்படி பணிக்கான செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஒப்பந்த நிபந்தனைகளின்படி குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. APOLLO MANPOWER SERVICES, திருப்பூர் அவர்களை ஓர் ஆண்டிற்கு பணி செய்ய உத்திரவிடவும், மேற்கண்ட வெளிக்கொணர்வு முகமை செயல்பாடுகளின் அடிப்படையில் அந்நிறுவனத்திற்கே தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்பணியினை நீட்டித்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.302</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.19</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23 சல்காரா பேக்கரி பின்புறம் சாலை பகுதியில் உள்ள கம்பெனிகள் மற்றும் பொதுமக்கள் குப்பைகளை போட்டு விட்டு செல்வதால் சுகாதார கேடு ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட பகுதிகளில் Green Net அமைக்கும் பணிக்கு ரூ.45000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். /2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>** :

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.303</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.20</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வரையுள்ள அனைத்து வார்டுகளிலும் மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதையும், அவ்வப்பொழுது கண்டறியப்படும் பழுதுகளையும் உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச செலவின மதிப்பீடு ரூ.5.00/-

இலட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். /2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.304</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.21</u>**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 குரும்பபாளையம் சாலையில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில், வீட்டு குடிநீர் இணைப்புகள் கொடுக்காமல் பிரதான குழாயில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் 10 குடிநீர் இணைப்புகளுக்கு, மூன்று முறை விநியோகத்தின் போதும் குடிநீர் செல்கிறது. அதனை துண்டித்து புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.45000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.305</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.22</u>**

மதுக்கரை நகராட்சி அலுவலக முதல் தளத்தில் உள்ள அலுவலர்கள் அறையில் கண்ணாடி தடுப்புகள் மற்றும் கதவுகள் அமைக்க உத்தேச செலவின தொகை ரூ.14898/-க்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். /2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.306</u>**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.23**

மதுக்கரை நகராட்சி அலுவலகம் முன்பு உள்ள வாகனம் நிறுத்தும் நிழற்குடையில் உள்ள தூண்கள் அகலம் குறைவாக அமைக்கப்பட்டதால் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு மிகவும் சிராமம் ஏற்படுகிறது. எனவே, வாகனம் நிறுத்தும் நிழற்குடையினை ஏற்கனவே உள்ளவற்றை பிரித்தெடுத்து சரியாக பொருத்தவும் மற்றும் புதியதாக விரிவுபடுத்தும் பணிக்கு ரூ.2.50/- இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். /2023/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.307**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.24**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட மதுக்கரை மார்கெட் பகுதிகளில் மாரியம்மன் கோவில் வளாகத்தில் உள்ள கிணற்றில் புதிதாக 7.5 HP மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச செலவின தொகை ரூ.1.00/- இலட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) ஆகும். இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். /2023/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.308**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.25**

மதுக்கரை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் புதிய ஈப்பு வாகன எண். TN99AA4397 க்கு Seat Cover, Floor mat, Head Light Bulb, Horn Wiring, Stickers, etc போன்ற Accessories பணிகளை மேற்கொள்ள 18.12.2023ம் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் வருமாறு.

| வ.எண். | (திருவாளர்கள்) | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | M/s. AMECO AGENCY<br>கோயம்புத்தூர். | ரூ..99000/- |
| 2 | M/s. AMECO ENTERPRICES<br>கோயம்புத்தூர். | ரூ.102000/- |
| 3 | M/s. AUTO MACHINERY EQUIPMENTS CO, M/s. AMECO LINES, M/s. KOYAS & SONS<br>கோயம்புத்தூர். | ரூ.96640/- |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் M/s. AUTO MACHINERY EQUIPMENTS CO, M/s. AMECO LINES, M/s. KOYAS & SONS கோயம்புத்தூர் நிறுவனத்தின் விலைவிகிதம் குறைவாக உள்ளதால், அந்நிறுவனத்தின் குறைந்த விலை பட்டியலை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1280/2023/இ1).

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.309</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் எண்.26</u>**

மதுக்கரை நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் குடிநீர் பராமரிப்பு உபகரணங்கள் மற்றும் தெருவிளக்கு உபகரணங்கள் வைக்கும் வைப்பறை இல்லாமல் பொருட்கள் வெளிப்புறத்தில் அடிக்கி வைப்பதனால் பாதுகாப்புயின்றியும் மழைக்காலங்களில் நனைந்து பயன்படுத்த முடியாமல் நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பொருட்கள் வைப்பதற்கு பாதுகாப்பு கூடம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச செலவின மதிப்பீடு ரூ.5.50/- இலட்சம் (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். /2023/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.310</u>**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.27**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 குரும்பபாளையம் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஆன்லைன் பூஸ்டர் பணிக்கு ரூ. 1.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு 22.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு .

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 0.94% அதிகம் |
| 2 | திருவாளர். எஸ்.பி இன்ஜினியரிங் | மதிப்பீட்டினை விட 0.01% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். எஸ்.பி இன்ஜினியரிங் (மதிப்பீட்டினை விட 0.01% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது (ந.க.எண். 2627/2023/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.311**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.28**

மதுக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 வஞ்சியம்மன் கோவில் பகுதியில் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 22.12.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு .

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திரு. மகேந்திரன், மதுக்கரை | மதிப்பீட்டினை விட 0.01% குறைவு |
| 2 | திருவாளர். எஸ்.பி இன்ஜினியரிங் | மதிப்பீட்டினை விட 0.98% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மகேந்திரன், மதுக்கரை (மதிப்பீட்டினை விட 0.01% குறைவு) அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது (ந.க.எண். 2627/2/2023/இ1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.312**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.29**

மதுக்கரை நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண். TN 37 CE 9128 டம்பர் பிளேசர் வாகனத்திற்கான தகுதி சான்று 22.12.2023 அன்றுடன் முடிவடைகிறது. இவ்வாகனம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பொது வழி சாலையில் இயக்கப்பட வேண்டியுள்ளது. வாகனம் பழுது நீக்கம் செய்யவும், வருடாந்திர பாரமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) ஆகும் மேற்கொண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் . 2759 / 2023 / எச்1

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.313**

அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் எண்.30**

மதுக்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுக்கரை கிராமம், க.ச.எண். 731/3B ல் 1.034 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருவாளர். தன்வி வென்ச்சர்ஸ் & டெவலப்பர்ஸ் எல்எல்பி, எண்.5 ஸ்கூல் ரோடு, கிருஷ்ணசாமி நகர், இராமநாதபுரம் என்பவரின் விண்ணப்பம் மீதான கோவை உள்ளூர் திட்டக் குழுமம் இணை இயக்குநர், அவர்களின் கடிதம் எண். CBELPA/0GIMHBOS/2023 2022/TCP நாள்.09/05/2023ல், மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ./கோ.உ.திகு எண்.221/2023 எண்ணிடப்பட்டு மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள், பொது ஒதுக்கீடு மற்றும் TANGEDCO ஒதுக்கீடு ஆகிய இடங்களை தானசாசன ஆவண மூலம் மதுக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 3612/2023 நாள்.04.05.2023ல் மதுக்கரை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் அமையும் சாலைகளில் LED தெருவிளக்குகள் அமைக்க நகராட்சிக்கு ரூ.9000/- மற்றும் திரும்ப பெறக்கூடிய வைப்புத்தொகை ரூ.105000/- னை 26.12.2023ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளதாகவும், மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளது எனவும், குடிநீர் பகிர்மான குழாய்கள், சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால், மின் கம்பங்கள் ஆகியவை நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் நகராட்சி பொறியாளர் 26.12.2023 ல் சான்று வழங்கியுள்ளார்.

எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை (TANGEDCO இடம்) நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ளவும், மனுதாரரின் உத்தேச மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2546/2023/எப்1)

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (TANGEDCO இடம்) இடங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொள்ளவும், 20 மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திருவாளர்கள். ஜெய் சூர்யா இண்டஸ்ட்ரீஸ், திருப்பூர் அவர்களுக்கு வழங்கிய தூய்மைபணிக்கான வெளிக்கொணர்வு முகமை/ ஒப்பந்தத்தை ரத்து செய்யவும். இப்பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.314**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை

நாள் : 28.12.2023

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்

மதுக்கரை நகராட்சி